Ministry of Health and Long-Term Care

ஆகஸ்ட் 28, 2007

# முதுமை காலத்தில் வீட்டில் வாழும் திட்டம்

முதுமை காலத்தில் வீட்டில் வாழும் திட்டம் ஒன்றில் 700 க்கும் அதிகமான மில்லியன் டொலர்களை மூன்று வருட காலத்தினூடாக முதலீடு செய்வதன் மூலம், முதியவர்களுக்கான சமூக வாழ்க்கைத் தெரிவுகளை அரசாங்கம் விஸ்தரிக்கிறது. மாகாணத்தின் 14 உள்ளூர் ஹெல்த் இன்டெகரேஷன் நெட்வர்க் (LHINs), முதியவர்கள் தங்கள் சொந்த வீடுகளிலேயே சுதந்திரமாக வாழ்வதற்கான தேவைகளை பூர்த்தி செய்ய பல்வேறுபட்ட ஆதரவு சேவைகளை உருவாக்க, குறிப்பிடத்தக்க நிதி உதவி பெறும்.

சேவைகள், மேம்பட்ட வீட்டு பராமரிப்பு மற்றும் உணவு, போக்குவரத்து, பகல் நேரத்தில் பெரியவர்களுக்கான திட்டங்கள், வீட்டுவேலை சேவைகள் மற்றும் பராமரிப்பு ஆதரவுகள் அத்தோடு நடமாட்ட உதவிக்கு அதிகரிக்கப்பட்ட வாய்ப்புகள் ஆகியவற்றை உட்படுத்தக்கூடும். இந்த சமூக சேவைகள் முதியவர்களுக்கு நலமான மற்றும் சுதந்திரமான வாழ்வை தங்கள் வீடுகளிலேயே வாழ்வதற்கு, ஆதரவு வழங்கும்.

ஆபத்திலிருக்கும் மற்றும் ஓரங்கட்டப்பட்ட முதியவர்களுக்கு வாய்ப்பு மற்றும் நியாயத்தன்மை ஆகியவற்றை அதிகரிக்கும், கலாச்சாரத்தைக் கருத்தில் கொண்ட தெரிவுகள் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அணுகுமுறைகள் போன்ற, புதுவகையான சேவைகளுக்கான அணுகு முறைக்கென முதுமை காலத்தில் வீட்டில் வாழும் திட்டத்திற்கான நிதியின் இருபது விகிதம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகை ஒதுக்கப்படும். அத்தோடு, முதியவர்களை இனங்கண்டு அவர்களோடு தொடர்பு ஏற்படுத்தக்கூடிய சமூக உறுப்பினர்களை (கலாச்சாரம், மொழிசார்ந்தவர்கள் போன்ற) பாவித்து *ஒருவருக்கொருவர் உதவும்* முகமாக, சமுதாயத்திற்குள் திறமை வளர்த்தல் போன்றவற்றிற்கும் இந்த நிதி ஒதுக்கீடு உதவும்.

இந்த அணுகுமுறைகள், பாரம்பரியத்துக்குப் புறம்பான பங்காளித்துவம் அத்தோடு புதிய முன்தடுப்பு மற்றும் நல்வாழ்வு சேவைகள் போன்றவற்றை ஆதரிக்கவும், நிதிவழங்கக்கூடும். உதாரணமாக, சிநேகபான்மையுடன் வீட்டிற்கு வந்து போதல்/தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் நியமனங்களுக்கான போக்குவரத்துக்கள் போன்ற பராமரிப்பு வழங்கும் குழுக்கள் மற்றும் தனி நபர்கள்.

LHINs க்கு நிதி ஒதுக்கீடு செய்ய பாவிக்கப்படும், இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த புதிய நிதி வழங்குதல் முறை , ஒவ்வொரு LHIN இல் உள்ள மக்களின் சுகநலத் தேவைகள் மற்றும் அதோடு தொடர்புடைய செலவுகள் ஆகியவற்றின் உத்தேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

- சுகநலத் தேவைகளின் உத்தேசம், தனி நபர்களின் வயது, நோய்கண்டுபிடிப்பு மற்றும் கிராமிய அத்தோடு சமூக-பொருளாதார நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டது.
- ஒவ்வொரு LHIN ற்கான 2010 ற்கான சனத்தொகைத் தேவைகள், சனத்தொகை வளர்ச்சி மற்றும் முதுமையடைதல் போன்றவற்றின் கணிப்பின் அடிப்படையில் அமைக்கப்படுகின்றன.

முதுமை காலத்தில் வீட்டில் வாழ்வதற்கான நிதியின் விபரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| உள்ளூர் ஹெல்த் இன்டெகரேஷன் நெட்வர்க் (LHINs) | 2007/08 நிதித் திட்டமிடல் | LHINs ற்கு மூன்று வருட ஒதுக்கீடு | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப முதலீடு 2008/09 | திட்டமிட்ட அடிப்படை உயர்வு 2009/10 | திட்டமிட்ட அடிப்படை உயர்வு 2010/11 | திட்டமிட்ட மூன்றுவருட – நிதியுதவி |
| ஏரி சென்ட் கிளேயார் | $187,000 | $3,937,535 | $9,785,302 | $17,282,348 | $31,005,184 |
| சவுத் வெஸ்ட் | $236,000 | $7,005,606 | $17,409,869 | $30,748,507 | $55,163,982 |
| வாட்டர்லூ வில்லிங்டன் | $181,000 | $4,783,520 | $11,887,688 | $20,995,487 | $37,666,695 |
| ஹமில்டன் நயாகரா ஹால்டிமென்ட் பிரான்ட் | $295,000 | $7,638,234 | $18,982,036 | $33,525,196 | $60,145,467 |
| சென்றல் வெஸ்ட் | $162,000 | $2,737,669 | $6,803,474 | $12,015,982 | $21,557,124 |
| மிஸிசாகா ஹால்டன் | $196,000 | $7,685,778 | $19,100,189 | $33,733,872 | $60,519,839 |
| டொரொன்டோ சென்றல் | $243,000 | $6,194,791 | $15,394,886 | $27,189,738 | $48,779,415 |
| சென்றல் | $263,000 | $13,527,801 | $33,618,398 | $59,375,263 | $106,521,461 |
| சென்றல் ஈஸ்ட் | $288,000 | $4,641,877 | $11,535,688 | $20,373,799 | $36,551,365 |
| சவுத் ஈஸ்ட் | $182,000 | $2,211,479 | $5,495,822 | $9,706,466 | $17,413,767 |
| சம்ப்ளெயின் | $246,000 | $6,928,868 | $17,219,166 | $30,411,697 | $54,559,731 |

| உள்ளூர் ஹெல்த் இன்டெகரேஷன் நெட்வர்க் (LHINs) | 2007/08 நிதித் திட்டமிடல் | LHINs ற்கு மூன்று வருட ஒதுக்கீடு | | | |
|---|---|---|---|---|---|
| | | <u>ஆரம்ப</u> <u>முதலீடு</u> 2008/09 | திட்டமிட்ட அடிப்படை உயர்வு 2009/10 | திட்டமிட்ட அடிப்படை உயர்வு 2010/11 | திட்டமிட்ட மூன்றுவருட – நிதியுதவி |
| நோத்சிம்கோ முஸ்காகோ | $161,000 | $2,973,268 | $7,388,969 | $13,050,056 | $23,412,292 |
| நோர்த்-ஈஸ்ட் | $202,000 | $4,290,570 | $10,662,643 | $18,831,868 | $33,785,081 |
| நோர்த்-வெஸ்ட் | $158,000 | $1,046,673 | $1,924,956 | $3,399,768 | $6,371,397 |
| ஒன்டாரியோ மொத்தம் | **$3,000,000** | **$75,603,669** | **$187,209,085** | **$330,640,046** | **$593,452,800** |

<u>மொத்த நிதியுதவி</u>

| | |
|---|---|
| உதவும் கருவிகளுக்கான திட்டம் <u>நிதியுதவி உயர்வு</u> (நடமாட்ட உதவிகள்) | $40,000,000 |
| மாகாண முன்னுரிமைகள் | $66,000,000 |
| LHINs ற்கான ஒதுக்கீடு | <u>$596,452,800</u> |
| | $702,452,800 |

ஊடகத் தொடர்புகள்:

ஜெப் ரோரர்
அமைச்சரின் அலுவலகம்
416-326-8016

டேவிட் ஜென்சன்
சுகாதார மற்றும் நீண்டகால பராமரிப்பிற்கான அமைச்சு
416-314-6197

Also available in English.
Aussi disponible en français.

www.health.gov.on.ca